புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2056 • ஜூலை 24, 2025 • புரட்சி 25 • முழக்கம் 32 • விலை ரூ.6.00

## மானுடத்தை வாழவிடுங்கள்

நாடார்கள், கவுண்டர்கள், முதலியார், வன்னியர்கள் என்று ஜாதிக்கொரு திருமண சேவை மையங்கள் வந்துவிட்டன. தொலைக்காட்சிகளில் இதற்கான விளம்பரங்கள் வரிசை கட்டி வருகின்றன.

மக்களுக்கான சேவை மையங்கள் இப்போது மறைந்து விட்டன. ஜாதி கடந்த திருமணங்கள் என்றாலே அதை குற்றமாகப் பார்க்கிறது சமூகம். இதே ஜாதி நம்பிக்கையாளர்கள் தங்கள் குடும்ப உறுப்பினருக்கு சிகிச்சைக்கு இரத்தம் தேவைப்பட்டால் ஜாதி பார்க்க மாட்டார்கள். எந்த வகை இரத்தம் என்று தான் பார்ப்பார்கள். அது தனது ஜாதிக்காரர்கள் வகை இரத்தமாகத் தான் இருக்க வேண்டும் என்று பொங்கி எழ மாட்டார்கள். “எந்த ஜாதியாக இருந்தால் என்ன நல்ல மனசு இருக்கிறதே” என்று மாலை போட்டு பாராட்டுவார்கள்.

தன் வீட்டுப் பெண்ணுக்கு திருமணமாகி மணமுறிவு ஏற்பட்டு இரண்டாவது திருமணத்திற்கு வரன் தேடும்போது மட்டும், ஜாதி தடையில்லை. பையன் நல்லவனாக இருந்தால் போதும் என்று ஜாதி மறுப்புக்கு வந்து விடுவார்கள். இந்தியாவில் ஜாதி அடையாளம் இப்படி தடுமாறுகிறது. இப்போது ‘குடிமகன்’ அடையாளத்திற்கும் நெருக்கடி வந்துவிட்டது. தேர்தலில் ஒரு குடிமகன்(அ) குடிமகள் ஓட்டுரிமை பெறுவதற்கு பல்வேறு தடைகளைத் தாண்ட வேண்டி இருக்கிறது.

ஜாதகப் பொருத்தம் சரியில்லை என்பது போல் ஆதார் சரியில்லை, வாக்காளர் அட்டை சரியில்லை, பிறப்பு சான்றிதழ் கொண்டு வா, இருப்பிட சான்றிதழ் கொண்டு வா, அப்போதுதான் உனக்கு ஓட்டுரிமை கிடைக்கும் என்று தேர்தல் ஆணையம் கூறுகிறது. அரசியல் சட்டம் குடிமக்கள் என்பதற்கான அடையாளம் இந்தியாவில் வாழ்ந்தால் போதும் என்று கூறுகிறது. ஆனால் தேர்தல் ஆணையம் ஓட்டுரிமைக்குரிய குடிமகனாக இருப்பதற்கு பிறப்பு, இறப்பு சான்றிதழ் கேட்கிறது. குடிமக்களுக்கான அரசியல் சட்டம் மத அடையாளத்தை வழங்கவில்லை. ஆண், பெண் பேதத்தையும் கூறவில்லை. ஆனால் ஒன்றிய ஆட்சி குடிமக்களாக இருக்க வேண்டும் என்று சொன்னால் இந்துக்களாக இருக்க வேண்டும் என்பதை தனது கொள்கையாக்கிக் கொண்டு விட்டது. மனிதர்களுக்கான அடையாளங்களுக்கு இப்படி போராட வேண்டிய நிலையில் உறுப்புகளுக்கான அடையாளங்கள் மதத்தை, சம்பிரதாயங்களை உடைத்து வருகின்றன.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையில் ஒரு புரட்சி நடந்துள்ளது. கல்லீரல் பாதிக்கப்பட்ட இரு நோயாளிகள் கோவையில் வெவ்வேறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இருவரின் துணைவியாரும் தங்களது கணவர்களுக்கு கல்லீரலை கொடையாக தருவதற்கு முன்வந்தனர். ஆனால் இரத்தப் பிரிவு பொருந்திப் போகவில்லை.

இரண்டு துணைவியாரின் கல்லீரலும் அடுத்த கணவருக்கு பொருந்திப் போனது. இந்த நிலையில் இரண்டு மருத்துவமனைகளும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை ஒரே நேரத்தில் வெற்றிகரமாக செய்து முடித்து விட்டன. இரண்டு மருத்துவமனைகளுக்குமான தொடர்புகளையும் ஒரே நேரத்தில் இணைத்து இந்த சிகிச்சை நடந்து முடிந்திருக்கிறது. ஒருவரின் மனைவி இன்னொருவரின் கணவருக்கும், இன்னொருவரின் மனைவி மற்றொருவரின் கணவருக்கும் உறுப்புகளை கொடையாக வழங்கி இருக்கிறார்கள்.

கணவர்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்றால் ஜாதி உடைகிறது. அய்யோ! மற்றொரு ஆணுக்கு எனது உடல் உறுப்பா? என்ற கேள்வியும் எழவில்லை. பழமை சம்பிரதாயம் நொறுங்கிப் போகிறது. ஆனால் சமூக உறவுகளில் மட்டும் ஜாதியும், மதமும் ஆட்டம் போட்டுக் கொண்டு இருக்கின்றன.
திருமணத்துக்கு ஜாதி அடையாளம்,
குடிமகனுக்கு இந்து அடையாளம்,
உயிர்காப்புக்கு மட்டும் மனித அடையாளம்,
மானுடத்தை வாழவிடுங்கள்!

–கோடங்குடி மாரிமுத்து.

## படுகொலைகளின் பீடமாகிய ‘தர்மஸ்தலா’

***கர்நாடக மாநிலம், தர்மஸ்தலாவில் மஞ்சுநாதா என்ற கோயில் பாஜக எம்.பி வீரேந்திர ஹெக்டே கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் 100க்கும் மேற்பட்ட பெண்கள் பலாத்காரம் செய்து கொல்லப்பட்டதாகவும், உடல்களைப் புதைத்ததாகவும், மஞ்சுநாதா கோயிலின் முன்னாள் ஊழியர் பீமா கடந்த ஜீலை 4-ம் தேதி புகார் அளித்துள்ளார்.***

*கர்நாடக மாநிலத்தில் தென் பகுதியில் உள்ள தர்மஸ்தலாவில் பத்தாண்டுகளாக பாலியல் வல்லுறவுகளும் படுகொலைகளும் நடந்து வருவதாக தற்போது ஆதாரங்கள் வெளிவந்துள்ளன.*

*இதுகுறித்து அவர் கூறியதாவது: 1995ம் ஆண்டு முதல் 2014 வரை, மஞ்சுநாதா கோவிலில் தூய்மைப் பணியாளராக வேலை செய்தேன். இந்த காலகட்டத்தில் கோயிலின் அருகில் ஓடும், நேத்ராவதி ஆற்றங்கரையில் பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட நிலையில், 100க்கும் மேற்பட்ட பெண்களின் உடல்களை என் மேற்பார்வையாளர் உத்தரவின்படி புதைத்தேன்’ என வாக்குமூலம் அளித்துள்ளார்.*

*தனக்கு மேல் இருந்தவர்கள் தன்னை கொன்று விடுவதாக மிரட்டியதால் இத்தனை ஆண்டுகள் அமைதியாக இருந்ததாக அவர் சொல்கிறார். குற்ற உணர்வோடு இதற்கு மேலும் தன்னால் உயிரோடு இருக்கமுடியாது" என அவர் தெரிவித்துள்ளார். தான் புதைத்ததற்கு சான்றாக எலும்புக்கூட்டை தோண்டி எடுத்து பாதுகாத்து வைத்திருப்பதை காண்பித்துள்ளார். கர்நாடகவில் இந்த காலகட்டத்தில் காணாமல் போன பெண்கள் 4000 என புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன.*

*தெட்சிணக் கன்னடா மாவட்டம் பெல்தங்கடியில் தர்மஸ்தலா மஞ்சுநாதர் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. தர்மஸ்தலாவானது சமணர்களால் உருவாக்கப்பட்டது. நாடெங்கும் சமண கோயில்களை விழுங்கிய பார்ப்பனர்களின் (சைவ, வைணவ சமயம்) ஆதிக்கமே இதிலும் மேலோங்கியுள்ளது. இக்கோயில் மூலவர்களாக மஞ்சுநாதரும் (சிவனும்), சமண சமயத்தின் எட்டாவது தீர்த்தங்கரான சந்திரபிரபாவும், கோயில் காவல் தெய்வங்களாக குமாரசுவாமியும் மற்றும் கன்னியாகுமரி எனும் யட்சினியும் உள்ளனர்.*

*“மத நல்லிணக்கத்திற்கு உதாரணம் என்று போற்றப்படும்” தர்மஸ்தலா கோயிலின் நிர்வாகத்தை சமண சமய வீரமன்னா பெர்கடே என்பவரின் வழிவந்த குடும்பத்தினர் மேற்பார்வையிடுகின்றனர். ஆனால் ’மத்வரின் துவைத’ மரபைப் பின்பற்றும் வைணவ பார்ப்பனர்கள்தான் கோயில் பூசைகளை செய்கின்றனர்.*

*சம்பவத்தில் தொடர்புடைய தர்மஸ்தலாவின் அதிபராகவும் கோலோச்சி வருபவர் தான் வீரேந்திர ஹெக்டே என்ற பார்ப்பனர். பா.ஜ.க.வின் மாநிலங்களவை உறுப்பினரான வீரேந்திர ஹெக்டே தனது 21ஆவது வயதிலேயே தர்மஸ்தலாவின் நிர்வாகியானவர். 50 ஆண்டுகளையும் கடந்தும் கோயிலை மட்டுமின்றி அந்த ஊரையே ஆளும் பொறுப்பில் நீடிப்பவர். 2015இல் இந்திய ஜனாதிபதி பிரனாப் முகர்ஜியிடம் பத்ம விபூஷண் விருதை வாங்கினார் ஹெக்டே. அடல் பிகாரி வாஜ்பாய் உள்ளிட்டவர்களிடமிருந்தும் கூட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார் ஹெக்டே. ஹெக்டே போல் பல உச்சிகுடுமிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் இந்த சம்பவத்துக்குக் காரணம் என்ற கோணத்தில் தகவல் வந்து கொண்டு இருக்கின்றன.*

*ஒவ்வொரு ஆண்டும் தக்ஷிண கன்னடா மாவட்டத்தில் 100 பெண்களின் இயற்கைக்கு மாறான மரணங்கள் பதிவாகின்றன என்று ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் 2017ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் தேதி குழுவின் முன் கூறினார். அதே மாவட்டத்தில், 402 பெண்கள் மாயமான வழக்குகளும், 106 பாலியல் வன்கொடுமை வழக்குகளும் பதிவாகியுள்ளன." இந்த கோயில் தனியார் வசம் உள்ளது. கோயிலை அறநிலையத் துறை இடமிருந்து மீட்க வேண்டும் என்று கூறும் சங்கிகள் தனியாரிடம் போனால் இது போன்ற நிகழ்வுகள் தான் நடக்கும் என்பதற்கு இதுவே உதாரணம்.*

## சமரசமற்ற கடவுள் மறுப்பாளர் வேலுபிரபாகரன் முடிவெய்தினார்

*சீரிய பகுத்தறிவாளரும், திரைப்பட இயக்குநர் - நடிகர் - ஒளிப்பதிவாளருமான தோழர் வேலு பிரபாகரன் அவர்கள் (வயது 68) இன்று 18.07.2025 விடியற்காலை மறைந்தார் என்ற செய்தியறிந்து வருத்தமடைகிறோம்.*



*1980-ஆம் ஆண்டில் ஒளிப்பதிவாளராக தமிழ்த் திரையுலகில் அறிமுகமான வேலு பிரபாகரன்,பின்னர் இயக்குநராகவும் உருவெடுத்தவர். இவர் இயக்கிய ‘கடவுள்’, ‘புரட்சிக்காரன்’ போன்ற திரைப்படங்களில் தந்தை பெரியாரின் ஜாதி ஒழிப்பு-பெண்ணுரிமைக் கருத்துக்களையும், கடவுள் மறுப்பு - பகுத்தறிவுக் கொள்கைகளையும் அழுத்தமாகப் பேசி, பொதுமக்களாலும் அத்திரைபடங்களை நேசிக்கச் செய்தவர்.*

*தன்னை நாத்திகவாதி என்று வெளிப்படையாக அறிவித்துக்கொண்டு, தமிழ்த் திரைத்துறையில் தவிர்க்க முடியாத இடத்தைத் தனக்கென கொண்டிருந்தது மட்டுமல்லாமல், திரைப்பட படப்பிடிப்புத் தளங்களில் கூட மூட நம்பிக்கை ஒழிப்புக் கருத்துக்களைப் பேசி,தன்னுடன் பணியாற்றும் திரைத்துறை நண்பர்களையும் பகுத்தறிவாளராக்கிய பெருமைக்குரியவர் வேலு பிரபாகரன்.*

*திரைத்துறையில் நடிகர் சத்யராஜ் போன்ற பலர் நாத்திகராகவும், பகுத்தறிவாளராகவும் அடிப்படைக் காரணியாய் இருந்தவர் வேலு பிரபாகரன். நடிகர் ரஜினிகாந்த் பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றில் பெரியார் குறித்து அவர் வைத்த விமர்சனத்திற்காக, எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் கடுமையான பதிலடியைக் கொடுத்த துணிச்சல்காரர். கந்தசஷ்டி கவசம் குறித்து கறுப்பர் கூட்டம் வலையொளியில் வெளியான காணொளிகளுக்காக, அதில் பணிபுரிந்த தோழர்கள் மீது கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் வழக்குப் பதிந்து கைது செய்தபோது, அந்த கைதைக் கண்டித்து கந்த சஷ்டி கவசத்தில் என்ன உள்ளது என்று பேசி காணொளிகளை வெளியிட்டு எதிர்வினையாற்றியவர் வேலு பிரபாகரன். அதற்காக கைது செய்யப்பட்டு ஒரு மாதம் சிறையிலும் இருந்தார்.*

*தொலைக்காட்சி விவாதங்கள், வலையொளிகள் மூலமாக பெரியாரின் நாத்திகக் கொள்கைகளைப் பரப்பி வந்தவர். பெரியார் போலவே வேடமணிந்துகொண்டு, பெரியார் குரலிலேயே பேசி காணொலிகளை வெளியிட்டு வந்தார். பெரியாரியலுக்காக தனிமனிதராக ஒரு இயக்கம் போலவே செயல்பட்டு வந்தார் என்றால் மிகையல்ல. வேலு பிரபாகரன் மறைவு திரைப்படத்துறையினருக்கும், முற்போக்காளர்களுக்கும் பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். தோழர் வேலு பிரபாகரன் அவர்கள் சீரிய பெரியாரியராக, தோழராக என்றும் நம் மனதில் நிலைத்திருப்பார்!*

***கொளத்தூர் மணி,***
***தலைவர்,***
***திராவிடர் விடுதலைக் கழகம்.***
***18.07.25***

## தலையங்கம்

# ஆர்.எஸ்.எஸ் கல்வி மாநாடு நடத்துவது ஏன்?

கேரள மாநிலம் காலடியில் நான்கு நாள் கல்வி மாநாடு ஜூலை 25 முதல் 28 வரை நிகழப்போகிறது. பல்கலைக்கழக துணை வேந்தர்கள், ஒன்றிய ஆட்சியின் உயர்கல்வி நிறுவனத் தலைவர்கள், பாஜக ஆளும் மாநிலங்களின் கல்வி அமைச்சர்கள், இவர்களோடு ஆன்மீகம் பேசும் மதத் தலைவர்கள் இதில் பங்கேற்கப் போகிறார்கள்.

மாநாட்டைக் கூட்டி இருப்பது ஒன்றிய ஆட்சியா? கல்வியாளர்களா? கேரள மாநில அரசா? இல்லை. ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன் பகவத் கூட்டி இருக்கிறார். தேசிய கல்விக் கொள்கையைத் தீவிரமாக செயல்படுத்துதல், பாரம்பரிய கல்வி முறையை முன்னெடுத்தல் என்பது பற்றி இவர்கள் ஆராயப் போகிறார்களாம். ஒன்றிய கல்வி அமைச்சகம் இந்த பொறுப்பை ஆர்.எஸ்.எஸ் அமைப்பிடம் ஒப்படைத்து விட்டது போலும்.

நாட்டை ‘இந்து ராஷ்டிரமாக’ மாற்றுவதற்கு அடிப்படையாக கல்வியை காவிமயமாக்க வேண்டும் என்ற உறுதியான முடிவோடு முயற்சிகள் நடக்கின்றன. காந்தி கொலையில் தொடர்புடைய அமைப்பு, கலவரங்களை உருவாக்கிய அமைப்பு என்று பல விசாரணை ஆணையங்கள் உறுதிப்படுத்தி உள்ளன. இதுவரை சட்டப்படி எந்த பதிவும் செய்யப்படாத ஒரு அமைப்பு. பல கோடி ரூபாய் செலவில் கட்டிடங்களை கட்டி வருகிறது. டெல்லியில் அண்மையில் 12 மாடி கட்டிடங்களை தனது தலைமைச் செயலகமாக கட்டி முடித்துள்ளது. வருமான வரி உள்ளிட்ட எந்த வரிவிதிப்பும் இவர்களுக்கு கிடையாது. ஆனால் பாஜக பிரதமர்களை தேர்வு செய்யக்கூடிய உரிமையை தன்னிடம் வைத்துள்ளது. 75 வயதுக்கு மேல் இருப்பவர்கள் பிரதமராக வர முடியாது என்று அத்வானி, முரளி மனோகர் ஜோஷிக்களை ஒதுக்கியது. இப்போது மோடிஅடுத்த பிரதமர் ஆக முடியாது என்று ஆர்எஸ்எஸ் தலைவர் குறிப்பால் உணர்த்தி இருக்கிறார். பெண்களை தங்கள் அமைப்பில் சேர தடைவிதித்துள்ளார்.

ஒன்றிய ஆட்சி திணிக்கும் தேசியக் கல்விக் கொள்கையை தமிழ்நாடு கடுமையாக எதிர்க்கிறது. இதில் இடம்பெற்றுள்ள மும்மொழிக் கொள்கை, பள்ளிப் படிப்பை தொடர விடாது, இடைநிற்றலை ஊக்குவித்தல், 3,5,8 வகுப்புகளில் விளிம்பு நிலை குழந்தைகளை வடிகட்டுதல் போன்ற ஆபத்தான திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன. இதை ஏற்க மறுத்து தமிழ்நாடு, தனக்கான ஒரு கல்விக் கொள்கையை அறிவித்து இருக்கிறது.

இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் தான் தமிழ்நாட்டுக்கான ஒருங்கிணைந்த கல்வி திட்டத்திற்கான(SSA) நிதியை வழங்குவோம் என்று மிரட்டி ரூ.2172 கோடி நிறுத்தி வைத்து விட்டார்கள். இந்த நிதி மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்ட மற்ற மாநிலங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அண்மையில் மகாராஷ்டிராவில் பாஜக ஆட்சியே மும்மொழித் திட்டத்தை செயல்படுத்தாமல் நிறுத்திவிட்டது. ஆனால் அந்த ஆட்சிக்கு வழங்கப்பட வேண்டிய கல்வி நிதியை நிறுத்தாமல் வழங்கி வருகிறார்கள்.

தேசிய கல்விக் கொள்கையையே ஆர்.எஸ்.எஸ் அமைப்பு உருவாக்கியது தான். ஆர்.எஸ்.எஸ் கல்வி அமைப்பான பாரதிய சிக்க்ஷா மண்டல், “எங்களது 60 விழுக்காடு ஆலோசனைகளை இந்த கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளது” என்று வெளிப்படையாகவே அறிவித்தது. கஸ்தூரி ரங்கன் ஒரு கல்வியாளர் அல்ல, அவரது தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை மதிப்பீடு செய்தவர் ஆர்.எஸ்.எஸ் துணை அமைப்பில் முக்கிய உறுப்பினரான ஜே.எஸ் ராஜ்புத் பள்ளிகளுக்கான பாடத்திட்ட குழுவிலும் ஆர்.எஸ்.எஸ் ஆதரவாளர்கள் ஊடுருவி இருந்தனர்.

மாநில கல்வித் துறையின் கருத்தைக் கூட கேட்கத் தயாராக இல்லை. கருத்துக்களை கேட்க வேண்டும் என்று தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியும் அதை புறந்தள்ளி விட்டது.

1953-ல் இராஜாஜி முதல்வராக இருந்தபோது கொண்டு வந்த குலக்கல்வி திட்டம் தமிழ்நாட்டில் அரசியல் போக்கையே திருப்பி விட்டது. காமராஜரின் சமூக நீதி சகாப்தம் தொடங்கியது. கடந்த 2023 ஆம் ஆண்டு மோடி தொடங்கி வைத்த பி.எம் விஸ்வகர்மா என்ற திட்டமும் ராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வி திட்டம் போன்றதுதான். 18 பரம்பரை தொழில் செய்த சமூகத்தினரை மீண்டும் குலத் தொழிலுக்கு திருப்பும் திட்டமாக இது வந்தது. இதை ஏற்க மறுத்த தமிழ்நாடு முதல்வர் மு.க ஸ்டாலின் இதற்கு மாற்றாக எந்த ஜாதியினரும் எந்த தொழிலையும் செய்யலாம் என்ற சமூகநீதி தொழில் திட்டத்தை அறிவித்து அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்.

மும்மொழித் திட்டத்தில் இந்தி கட்டாயமில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் இந்தி தவிர வேறு மொழிகளைக் கற்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கவில்லை. அதற்கான ஆசிரியர்கள் நியமனமும் இல்லை. அதே நேரத்தில் கணிதம், வானியல், தத்துவம், மொழியியல், நாடகம், யோகா போன்ற சமகால பாடத்திட்டங்களுடன் சமஸ்கிருதம் இணைக்கப்படும் என்று அழுத்தமாக கூறுகிறது. இந்த கல்விக் கொள்கை சமகால அறிவியல் வளர்ச்சியில் சமஸ்கிருதத்தை இவர்கள் எப்படி இணைக்கப் போகிறார்கள்?. சமூக அறிவியல் வளர்ச்சியால் சமஸ்கிருதம் என்ற பார்ப்பனியப் பண்பாடு அழிந்து போய்விடும் என்ற அச்சத்தின் காரணமாக சமஸ்கிருதத்தைத் திணிக்கிறார்கள்.

தேசிய மொழியாக சமஸ்கிருதமே இருக்க வேண்டும், அந்த காலம் வரும் வரை இந்தி தேசிய மொழியாக இருக்கலாம் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ் அமைப்புக்கு கொள்கையை உருவாக்கி தந்த கோல்வாக்கர் கருத்து. இப்போது ஆர்எஸ்எஸ் தனது காய்களை அதை நோக்கியே நகர்த்த தொடங்கியிருக்கிறது. பாரம்பரிய கல்வி,பாரம்பரிய அறிவு என்று இவர்கள் பேசுவது பார்ப்பனிய சமஸ்கிருத பண்பாட்டை மீட்டெடுக்கும் முயற்சிதான். இதை முறியடிப்பதற்கு சமூகநீதி பண்பாட்டை நாம் உயர்த்திப் பிடித்தாக வேண்டும்.

# உயர்கல்வி நிறுவனங்களில் ஜாதி பாகுபாடுகள்

## கனிமொழி எம்பி கேள்வி

ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் நிலவும் தீண்டாமை உள்ளிட்ட பாகுபாடுகள் குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி நேற்று (21--07-2025) எழுத்துப் பூர்வமான கேள்விகளை எழுப்பினார்.

“உயர் கல்வி நிறுவனங்களில் சமத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில், யு.ஜி.சி. விதிமுறைகள் 2012 இன் படி ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக் கழகங்களில் Equal Opportunity Cells எனப்படும் சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அத்தகைய பிரிவுகளை உருவாக்கிய மத்திய பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை விவரங்கள் என்ன? இல்லையென்றால், சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப்படாததற்கான காரணங்கள் என்ன?

ஒன்றிய அரசின் கல்லூரி-பல்கலைக்கழக வளாகங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடு காட்டப் பட்ட சம்பவங்கள் குறித்த தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா?

அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் ஒன்றிய அரசின் மத்திய பல்கலைக்கழகங்களில் நடந்த இத்தகைய சம்பவங்களின் விவரங்கள், கல்லூரி வாரியாக/பல்கலைக்கழக வாரியாக எத்தனை? தரவுகள் இல்லையென்றால், அதற்கான காரணங்ள் என்ன?

பாகுபாடுகளை எதிர்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிர்வாகம் அல்லது அரசு வழங்கிய உதவிகள் என்ன?

சாதி அடிப்படையிலான பாகுபாட்டால் எழும் குறைகளை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசாங்கம் ஏதேனும் கூடுதல் வழிமுறைகளை வகுக்க, திட்டமிட்டுள்ளதா? அப்படி யானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லை யென்றால், அதற்கான காரணங்கள் என்ன?”

ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுத்துபூர்வமாக கேட்டிருந்தார்.

**ஒன்றிய கல்வி அமைச்சர் பதில்!**

இக்கேள்விகளுக்கு ஒன்றிய கல்வி அமைச்சகத்தின் இணையமைச்சரான டாக்டர் சுகந்தா மஜூம்தர் அளித்துள்ள பதில் வருமாறு:-

“ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்துக்கு உட்பட்ட 48 மத்திய பல்கலைக் கழகங்களிலும் மாணவர்களிடையே சமத்துவத்தை உறுதிப்படுத்துகிற Equal Opportunity Cells எனப்படுகிற சம வாய்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய பல்கலைக்கழகங்கள், நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப் பட்ட சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட சட்டப்பூர்வ தன்னாட்சி அமைப்புகளாகும்.

மேலும் அந்தந்த பல்கலைக் கழகங்கள் அவற்றுக்கென உருவாக்கப்பட்ட ஒழுங்குமுறை விதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

ஒன்றிய கல்வி அமைச்சகமும், யுஜிசியும் உயர் கல்வி நிறுவனங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டைத் தடுக்கவும், பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. மத்திய பல்கலைக் கழகங்களில் பாரபட்சம், பாகுபாடு உள்ளிட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை தடுக்க கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி வலைத் தளங்கள் அல்லது புகார் பதிவேடுகள் மூலம் புகார்களை பதிவு செய்வதற்கான வழிமுறைகளை நிறுவப்பட்டுள்ளன.

SC/ST/OBC மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களிடமிருந்து பெறப்படும் பாகுபாடு குறித்த புகார்களில், தவறு செய்யும் நபர்கள் மீது உடனடி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர் குறை தீர்க்கும் குழுக்களை (SGRCs) அமைத்தல் மற்றும் குறைதீர்ப்பு அதிகாரிகளை நியமித்தல், சம வாய்ப்பு குழுக்களை நிறுவுதல், மாணவர்களுக்கு கவுன்சிலிங் மையங்கள் மூலம் ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதில் குறிப் பிடத்தக்கவை ஆகும். மேலும் உயர் கல்வி நிறுவனங்களில் ராகிங் மற்றும் பாலியல் துன்புறுத்தலைத் தடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் வகுக்கப்பட்டுள்ளன”.

இவ்வாறு ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பார்ப்பன மெகா ஊழல்

**சந்தா கோச்சார் ரூ.64 கோடி லஞ்சம் பெற்றது உறுதியானது.**

ஐசிஐசிஐ வங்கி முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி சந்தா கோச்சார். வீடியோகான் நிறுவனத்துக்கு கடன் வழங்க ரூ.64 கோடி லஞ்சம் பெற்றது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என தீர்ப்பாயம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து தீர்ப்பாயம் தனது உத்தரவில் தெரிவித்துள்ளதாவது:

அமலாக்கத் துறை வழங்கிய ஆதாரங்களின்படி சந்தா கோச் சார் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி தனது கணவர் தீபக் கோச் சார் மூலம் வீடியோகான் குழுமத்திலிருந்து ரூ.64 கோடி லஞ்சம் பெற்றது நிரூபணமாகியுள்ளது. இந்த லஞ்ச பணம் தீபக் கோச்சாரின் என்ஆர்பிஎல் நிறுவனத்துக்கு மடைமாற்றப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளது.

வீடியோகான் நிறுவனத்துக்கு விதிகளை மீறி ரூ.300 கோடி கடன் வழங்க அனுமதி அளித் ததற்காக சந்தா கோச்சாருக்கு அவரது கணவர் மூலம் லஞ்சப் பணத்தை வீடியோகான் குழுமம் வழங்கியுள்ளது. இதற்கான ஆதாரங்கள் பிஎம்எல்ஏ சட்ட பிரிவு 50-ன் கீழ் நம்பக்கூடிய வகையில் கிடைத்துள்ளது.

இதன் மூலம் சந்தா கோச்சாருக்கு தொடர்புடைய ரு.74 கோடி சொத்துகளை அமலாக்கத் துறை முடக்கியுள்ளதை மேல்முறையீட்டு தீர்ப்பாயம் உறுதி செய்கிறது. ஐசிஐசிஐ வங்கி, வங்கி, கடன் வழங்கிய மறுநாளே வீடியோகான் குழுமத்தின் எஸ்இபிஎல் நிறுவனம் மூலம் ரூ.64 கோடியை தீபக் கோச்சாரின் நிறுவனத்துக்கு மாற்றியுள்ளது. வீடியோகான் குழுமத்துக்கு கடன் வழங்க தனிப்பட்ட முறையில் ஆதரவாக செயல்பட்ட சந்தா கோச்சார் குற்றவாளி என்பது உறுதி செய்யப்டுகிறது. இவ்வறு தீர்ப்பாயம் உத்தரவில் தெரிவித்துள்ளது.

# செயற்கை உயிர் வந்து விட்டது

## கொளத்தூர் நாத்திக விழா சிந்தனை[8]

**-விடுதலை இராசேந்திரன்**

***'இது இறைவன் கொடுத்த உடல்' என்ற நம்பிக்கையை பொது சமூகம் ஓரளவு புறக்கணித்து விட்டது என்றே கூறலாம். குழந்தை பிறப்புக்கு இறைவனே காரணம் என்ற கூற்று வாழ்வியலில் முறியடிக்கப்பட்டு விட்டது. குழந்தை பிறப்பை கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை அரசாங்கங்கள் செயல்படுத்தி வருகின்றன. அதில் வெற்றியும் பெற்று விட்டன. கருத்தடைச் சாதனங்களை கடவுள் நம்பிக்கையாளர்களே பயன்படுத்தத் தொடங்கி விட்டனர்.***

*குழந்தை இல்லாதவர்கள் பரிகார பூஜைகளை மட்டுமே நடத்தி வந்தனர். இப்போது கருத்தரிப்பு மருத்துவ மய்யங்கள் ஊருக்கு ஊர் வந்துவிட்டன. சினை முட்டை, விந்துக்களை இணைத்து அறிவியல் முறையில் கருவை உருவாக்குகிறார்கள். கருவை சுமக்க வாடகை பெண்களும் வந்து விட்டனர்.*

*கருத்தடைத் திட்டத்தை பெரியார் தீவிரமாக ஆதரித்தார். 'கர்ப ஆட்சி' என்ற நூலையும் அவரே வெளியிட்டார். குடும்ப வருமானம், சிக்கன வாழ்க்கை என்று குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை பொருளியல் பார்வையில் பலரும் அணுகினார்கள். ஆனால் பெரியார் பார்வை இதில் மாறுபட்டது. பெண்ணடிமைக்கு முக்கிய பங்கு வகிப்பது குழந்தைப் பேறு தான் என்பதை அவர் உணர்ந்தார். கருப்பை என்ற ஒன்றே பெண்களுக்கு வேண்டாம்! என்ற எல்லைக்கு பெரியார் சென்றார். பெண் விடுதலை கண்ணோட்டத்தில் பெரியார் இதை சிந்தித்தார். பெண் விடுதலை வரலாற்றில் இப்படி ஒரு புரட்சிக் குரலைக் கொடுத்த தலைவர் பெரியார் தான் என்று பெண் விடுதலை சிந்தனையாளர்கள் கொண்டாடுகிறார்கள்.*

*கடவுள் நம்பிக்கை உள்ளவர்களே செயற்கை கருத்தரிப்பு மருத்துவமனைகளை நோக்கி வரத் தொடங்கி விட்டார்கள். அது இறைவனின் கொடை என்ற கருத்தியலில் இருந்து வெளியே வந்து விட்டார்கள். மனித உடல் - நெருப்பு, காற்று, நீர், பூமி, வானம் எனும் பஞ்ச பூதங்கள் ஒருங்கிணைப்பால் உருவானது என்றும் உயிர் பிரிந்து மரணம் நிகழும்போது இந்த அய்ந்தும் தனித்தனியே பிரிந்து விடுகிறது என்றும் ஒரு கூற்று நம்பப்படுகிறது. நீண்டகால இந்த நம்பிக்கை அறிவியலுக்கு உடன்பட்டதா? இல்லை.*

*பிரான்ஸ் நாட்டின் இரசாயனத்துறை ஆராய்ச்சியாளர் அன்டோனி லெவோய்சியர்(Antoine Lavoisier) நிரூபித்த அறிவியல் ஆய்வின்படி நெருப்பு எரிதல் என்பது ஒரு இரசாயன நிகழ்வு. காற்று என்பது வாயுக்களின் (Gases) கலவை. நீர் என்பது, அய்ட்ரஜன் மற்றும் ஆக்சிஜனைக் கொண்டது. எனவே நெருப்பு, காற்று, நீர் தனி தனித் படிமங்கள் அல்ல. அதேபோல பூமியும், வானமும் தனியான படிமங்கள் (Elements) அல்ல.*

*அறிவியல் கலைக் களஞ்சியம் 'படிமம்' என்றால் (Elements) என்னவென்று விளக்குகிறது?. ஒரே வகையான அளவைக் கொண்டதே படிமம். பிரபஞ்சத்தில் அடிப்படையே படிமங்கள் தான். அதை மேலும் எளிமையாகப் பிளக்க முடியாது. உலகில் 109 படிமங்கள் உள்ளன. அதில் 91 இயற்கையாகக் கிடைப்பவை. 18 செயற்கையாக உருவானவை. பூமியில் உயிர் வாழும் அனைத்தும் 'கார்பன்' எனும் படிமத்தைத் தான் அடிப்படையாகக் கொண்டவை. உயிர் அணுக்கள் செயல்பாட்டுக்கு கார்பன்தான் அடிப்படையானது. பூமியில் நிறைந்திருக்கும் மற்றொரு படிவம் ஆக்சிஜன். காற்று, நீர், மலைகளிலும் ஆக்சிஜன் உண்டு. ஆனால் 'பஞ்சபூதம்' என்று நம்பப்படும் உயிர் வாழ்தலுக்கான அடிப்படையில் கார்பன் இடம் பெறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். கார்பன் இயங்காவிட்டால் உயிரணுக்கள் இல்லை. அதேபோல் உடல் எலும்புகளுக்கு வலிவூட்டுவது 'கால்சியம்'.*

*எலும்புகள் வலுவின்றி மனிதர்களோ, மிருகங்களோ இயங்கவே முடியாது. பிரபஞ்சம் உருவானதற்கு அடிப்படையாக இருந்தது ஹைட்ரஜன். அது 90 சதவீதம் பரவி நிற்கிறது. ஹைட்ரஜன் சுவையோ, மணமோ, வண்ணமோ இல்லாத வாயு. அமிலங்களுக்கு அமிலத் தன்மையைத் தருவதே ஹைட்ரஜன் தான். இப்படி உயிர் வாழ்தலுக்கு கார்பன், கால்சியம் உள்ளிட்ட பல படிமங்கள் கூறுகள் தேவைப்படுகின்றன. இது தான் அறிவியல். 'பஞ்சபூதம்' மட்டுமே உயிர் வாழ்தலை உறுதி செய்கிறது என்பது, அறிவியலுக்கு எதிரான நம்பிக்கைகள். ஆன்மீகத்தை - அறிவியலோடு இணைத்து கடவுள் படைப்போடு முடிச்சுப் போடும் பேச்சுகள் அறிவியலுக்கு எதிரானதாகும்!*

*"சமூகத்தில் உயிரைப் படைத்தது கடவுள்தான்; அதற்காக கடவுளை நம்புகிறேன்; கடவுளுக்கு நன்றி சொல்கிறேன்" என்ற நம்பிக்கை மூளை என்ற பொருளுக்குள் திணிக்கப்பட்டுள்ளன. அதற்கும் அறிவியல் இப்போது விடை கண்டு விட்டது. ஆனால் உயிரை கொடுத்தது கடவுளா? என்ற கேள்விக்கு அறிவியல் விடை தந்துள்ளது. உயிர் எப்படி உருவானது என்பது குறித்து இத்தொடரில் ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட சூழல் ஒன்று கூடி வரும் போது சில ரசாயனங்கள் இணைந்து வரும் போது 'உயிர்' என்ற பொருள் தோன்றியது என்று அறிவியல் கூறுகிறது. உயிரை உருவாக்கியது கடவுள் அல்ல என்பதற்கு இது அறிவியல் தந்த விடை. இப்போது உயிரை மனிதர்களாலே உருவாக்க முடியும் என்று அறிவியல் நிருபித்து கடவுளுக்கு விடை கொடுத்து விட்டது.*

*அமெரிக்காவின் கிரேக் வென்டர் என்ற விஞ்ஞானி சோதனைக் கூடத்தில் மே, 20, 2010 அன்று உருவாக்கியிருக்கும் புதியதொரு நுண்ணுயிரின் பெயர் சிந்தடிகா(Synthetica). செயற்கையாக உருவாக்கப்பட்ட உயிர் என்ற பொருள்படும் வகையில் சூட்டப்பட்ட பெயர். சடப்பொருள் வேறு, உயிர் பொருள் வேறு; உடல் வேறு, ஆன்மா வேறு என்று கூறி வரும் மதக் கோட்பாடுகள் மற்றும் பல கருத்து முதல்வாத கோட்பாடுகள் அனைத்தின் முகத்திலும் பூசப்பட்டிருக்கும் கரி - சிந்தடிகா.*

*ஒரு நுண்ணுயிரி (பாக்டீரியா) டி.என்.ஏவை (மரபணுவை) வேதியல் மூலக்கூறுகளாக செயற்கையாக உருவாக்கினார்கள். செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்த டி.என்.ஏவை (மரபணுவை) வேறு ஒரு நுண்ணுயிருக்குள் (பாக்டீரியாவுக்குள்) செலுத்தினார்கள். அதற்காக இந்த நுண்ணுயிரின் (பாக்டீரியாவின்) டி.என்.ஏக்களை அகற்றி வெறும் கூடாக வைத்திருந்தனர். அந்த கூட்டுக்குள் செயற்கையாக உருவாக்கப்பட்ட டி.என்.ஏ(மரபணு) செலுத்தப்பட்ட போது புதிய நுண்ணுயிர் 'உயிர்' பெற்றது. அதாவது வேதியல் மூலக்கூறு வழியாக 'உயிர்' உருவாக்கப்பட்டது.*

**ஒரு நுண்ணுயிரி (பாக்டீரியா) டி.என்.ஏவை (மரபணுவை) வேதியல் மூலக்கூறுகளாக செயற்கையாக உருவாக்கினார்கள். செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்த டி.என்.ஏவை (மரபணுவை) வேறு ஒரு நுண்ணுயிருக்குள் (பாக்டீரியாவுக்குள்) செலுத்தினார்கள். அதற்காக இந்த நுண்ணுயிரின் (பாக்டீரியாவின்) டி.என்.ஏக்களை அகற்றி வெறும் கூடாக வைத்திருந்தனர். அந்த கூட்டுக்குள் செயற்கையாக உருவாக்கப்பட்ட டி.என்.ஏ(மரபணு) செலுத்தப்பட்ட போது புதிய நுண்ணுயிர் 'உயிர்' பெற்றது. அதாவது வேதியல் மூலக்கூறு வழியாக 'உயிர்' உருவாக்கப்பட்டது.**

*சிந்தடிகா என்பது இயற்கை தனது இயக்கத்தின் போக்கில் தானே படைத்த புதியதொரு உயிரல்ல; ஏற்கெனவே இருக்கின்ற ஒரு உயிரின் மரபணுவை பிரதி எடுத்து குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட டாலி ஆட்டினைப் போன்ற நகலும் அல்ல. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி அல்லது தக்காளியைப் போன்றதும் அல்ல. இயற்கை படைத்த கூட்டுக்குள் நுழைக்கப்பட்டிருக்கும் செயற்கை என்று இதைச் சொல்லலாம். உயிரற்ற சடப் பொருளிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது.*

*இந்த உயிர் அறிவியலால் உருவானது. கடவுள் என்ற சக்தியிடமிருந்து விரதம் இருந்து, பூஜை நடத்தி, தவம் செய்து பெறப்பட்டது அல்ல! வேதத்தில் இதற்கான மந்திரங்களும் இல்லை. சிற்பி வடித்த கல் சிலைக்கு உயிர் கொடுத்து கடவுளாக்கும் சக்தி வேத மந்திரத்துக்கு உண்டு என்ற ஏமாற்று கருத்தை இப்போதும் சமூகம் நம்புகிறது. மந்திர சக்தியால் உயிர் கொடுக்கப்பட்ட அந்த கடவுளை தரிசிக்கக் கூடும் பக்தர்கள் கூட்டத்திலேயே நெரிசலில் சிக்கி மரணம் அடைகிறார்கள்.*

*சிலைக்கு உயிர் கொடுக்கும் வேத மந்திரங்கள் இந்த மனிதர்களுக்கு உயிர் கொடுக்காதா? பகுத்தறிவாளர்கள் இந்த கேள்வியை கேட்டால் மதத்தைப் புண்படுத்துகிறார்கள் என்று கூறுகிறார்கள். நீதிமன்றம் போய் வழக்குத் தொடுக்கிறார்கள் இப்படிப்பட்ட மரணங்கள் நிகழும் போது கடவுளை இதிலிருந்து ஒதுக்கிவிட்டு சட்டஒழுங்கு , காவல்துறை அரசியல் என்ற பிரச்சனைகளை கடவுளுக்கு பதிலாக புகுத்தி விடுகிறார்கள்.*

*இந்த அறிவியல் கண்டுபிடிப்பான செயற்கை உயிர், அதாவது செயற்கையான ஒரு மரபணு தொகுப்பு உருவாக்கப்படுகிறது. அதற்காக அதன் வேதியல் சேர்க்கை முறை கண்டறியப்படுகிறது, இப்படி உருவாக்கப்பட்ட மரபணு தொகுப்பு வேறு ஒரு செல்லுக்குள் செலுத்தப்படுகிறது. அந்த மரபணு தொகுப்பை ஏற்றுக்கொண்டு செயல்படு என்று செல்லுக்கு கட்டளையிட்டு ஏற்க வைக்கும் உயிரியல் மொழியை அறிவியல் ரீதியாக கண்டறியப்பட்டு அது செயல்படுத்த வைக்கப்படுகிறது. அந்த மொழி சமஸ்கிருதம் என்ற செத்த மொழி அல்ல! கணினி வடிவாக உருவாக்கப்பட்ட அறிவியல் மொழி. இந்த செயற்கை உயிரை உருவாக்கிய "நவீன பிரம்மா" அமெரிக்க விஞ்ஞானி கிரேட் வெண்டர். அவரது குழுவினரும் இணைந்து நடத்திய அறிவியல் புரட்சி.*

*உயிரைச் செய்றகையாக உருவாக்கும் ஆய்வுகள் உலகெங்கும் நடந்து வருகின்றன. ஒரேகானில் உள்ள ரீட் கல்லூரியின் தத்துவத்துறைப் பேராசிரியரும், முற்றிலும் இரசாயனப் பொருட்களிலிருந்தே செயற்கை உயிரை உருவாக்கும் ஆய்வில் ஈடுபட்டிருக்கும் புரோட்டோ லைஃப் என்ற இத்தாலிய நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியுமான மார்க் பெடோ, கடவுளின் ஏரியா என்று கருதப்படும் பகுதிக்குள் நாம் நுழைந்திருக்கிறோம். உயிர் என்பது மிகவும் வலிமையானது. நாம் நினைப்பதைச் செய்யும்படி ஒரு உயிரைப் படைக்கமுடியுமானால், எல்லா விதமான நல்ல காரியங்களையும் செய்யலாம்.'கடவுளின் வேலையை நாம் மேற்கொள்வதில் தவறில்லை என்கிறார்.*

**உதவிய நூல்கள்:**
***ரேடிக்கல் ஹீயுமானிஸ்ட் ஜன. 2023-லிருந்து***
***மதமும் அறிவியலும், மருதையன் - இளநம்பி***

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 licenced to post wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மதப் பண்டிகைகளை மறுக்கும் மேலமெஞ்ஞானபுரம்!

**வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ர.பிரகாஷ் எழுதி வருகிறார். மேலமெஞ்ஞானபுரம் என்ற ஊரின் வரலாறு இது.**

1967, தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த ஆண்டு. தமிழ்நாட்டு இளைஞர்களைத் தன்னகத்தே வாரி அணைத்து வைத்திருந்த தி.மு.கழகத்தின் சூழலுக்குத் தப்பாமல், தங்களையும் இணைத்திருந்த உடன்பிறப்புகள் சீ.தங்கத்துரை, சீ.டேவிட் செல்லத்துரை. தென்காசியில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ள மேலமெஞ்ஞானபுரம் இவர்களின் சொந்த ஊர். மாணவப் பருவத்திலேயே மதத்தைக் கடந்து, பகுத்தறிவுக் கொள்கைகளின் மீது நாட்டம் கொண்டிருந்தனர். தி.மு.க. கூட்டங்களில் பங்கேற்பதும், தேர்தல் பிரச்சார நாடகங்களில் நடிப்பதும், சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்வதும் இவர்களின் பணி. கழகம் ஆட்சிக்கு வந்த இரண்டே ஆண்டுகளில், சட்டமன்ற உறுப்பினர் ஆலடி அருணா அவர்களின் பரிந்துரையால் தங்கத்துரைக்கு மின்சார வாரியத்தில் வேலை. தி.மு.க. உருவாகி அப்போது 20 ஆண்டுகள் ஆகியிருந்தாலும், பெரியாரின் மீதான பற்றை தொண்டர்கள் விட்டுவிடவில்லை. கீழப்பாவூர் வழக்கறிஞர் வை.பாண்டிவளவன், பாவூர் நாவலர், இலக்குவனார். சு.இராமச்சந்திரன் என அன்றைய தி.மு.கழக உடன்பிறப்புகள் சிலர் கொண்டிருந்த தீவிர பெரியாரியபற்று, தங்கத்துரையையும் ஈர்த்தது. பெரியாரை வாசிக்கத் தொடங்கினார்.

திராவிடர் கழகத்தில் இருந்து தி.மு.கழகத்திற்குப் பாதையைத் திருப்பியோர் தமிழ்நாட்டில் லட்சக்கணக்கானோர் உண்டு. ஆனால், தி.மு.கழகத்தில் இருந்து தாய்க்கழகமான திராவிடர் கழகத்திற்கு சென்றோர் வெகுசிலர்தான். அந்த வெகுசிலர் என்ற வரலாற்றில் தன்னையும் இணைத்ததுடன், தன் சகோதரர் டேவிட் செல்லத்துரையையும் இணைத்தார் தங்கத்துரை. சொந்த ஊரில் கடும் எதிர்ப்புகளையும் மீறி, கடவுள் மறுப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, சாதி ஒழிப்புக் கருத்துக்களைப் பரப்பத் தொடங்கினார் டேவிட் செல்லத்துரை. மேலமெஞ்ஞான புரத்தில் மொத்தமுள்ள 400 குடும்பங்களில் சுமார் 300 குடும்பங்கள் கிறிஸ்தவர்கள், 100 குடும்பங்கள் இந்துக்கள். அதனால், கிறிஸ்தவத்தில் நிலவும் மூடநம்பிக்கை களுக்கு எதிராகப் பேசுவதற்கு முக்கியத்துவம் தந்தனர்.

1978 பிப்ரவரி 12-ஆம் நாள் பல்வேறு எதிர்ப்பு களுக்கிடையில், சுயமரி யாதைத் திருமணம் செய்துகொண்டார் டேவிட் செல்லத்துரை. அந்த ஊர் தேவாலயத்திற்குச் செல்லாமல் நடந்த முதல் திருமணம் அதுதான். 1988-இல் தங்கத்துரையும் தென்காசிக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு, மேலமெஞ்ஞானபுரத்திலேயே வசிக்கத் தொடங்கினார். இயக்கப் பிரச்சாரம் செய்வதோடு மட்டுமின்றி, ஊர் பிரச்னைகளிலும் தலையிடுவது என சகோதரர்கள் இருவரும் காட்டிய முனைப்பால், எதிர்ப்புகள் குறையத் தொடங்கின. சுமார் 15 குடும்பங்கள் இவர்களோடு கைகோர்த்தனர். பகுத்தறிவாளர் கழகத்தை அப்பகுதியில் தோற்றுவித்தனர். பொதுவாக, 'இந்துக் கடவுள்களை மட்டும் இல்லை என்பது, இந்து மத மூடநம்பிக்கைகள் மீது மட்டும் விமர்சனம் வைப்பது' என்பது திராவிட இயக்கத்தின் மீது சங் பரிவார்கள் திரும்பத் திரும்ப வைக்கும் விமர்சனம். எந்தப் பகுதிகளில் எந்த மதத்தினர் அதிகம் வசிக்கிறார்களோ, அந்தப் பகுதிகளில் அந்த மதத்தில் இருந்து திராவிட இயக்கத்தை நோக்கிப் பயணித்தவர்கள், அவரவர் மதங்களில் உள்ள மூடநம்பிக்கைகள், ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள் என்பதுதான் வரலாறு. அந்த வரலாற்றுக்கு நிகழ்காலச் சான்றாக இன்றும் திகழ்கிறது மேலமெஞ்ஞானபுரம். மேல மெஞ்ஞானபுரத்தில், 1988-இல் பகுத்தறிவாளர் கழகம் உருவானதில் இருந்தே, வாரந்தோறும் தவறாமல் குடும்ப சந்திப்புகளை நடத்தி, அதில் தந்தை பெரியாரின் சாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, மூட நம்பிக்கை ஒழிப்புக் கருத்துகளைப் பேசி வந்துள்ளனர். திருக்குறளைப் பரப்பினர்.

தேவாலயத்திற்கோ, கோயிலுக்கோ செல்வதைத் தவிர்த்தனர். கிறிஸ்தவத்தில் Vacation Bible school (VBS) என கோடைகாலத்தில், குழந்தைகள் மத்தியில் அந்த மார்க்கத்தைப் பரப்பும் வகுப்புகள் நடத்தப்படுவது வழக்கம். மேலமெஞ்ஞானபுரத்திலும் இப்படி நடத்தப்பட்ட VBS வகுப்புகளுக்கு நேரெதிராக, பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் வி.ஆர்.எஸ். (VRS) வகுப்புகளை 1989-இல் தொடங்கினர். அதாவது 'விடுமுறை கால பகுத்தறிவுப் பள்ளி' Vocational rationalist school. பத்தாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களை அழைத்து வந்து, 10 நாட்களுக்கு பகுத்தறிவுக் கொள்கைகளை ஊட்டி, அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பது இந்த வகுப்பின் நோக்கம். 36 ஆண்டுகளாக இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன இந்த வி.ஆர்.எஸ். VRS வகுப்புகள். எந்த மதப் பண்டிகையையும் இவர்கள் கொண்டாடுவதில்லை. தங்கள் குடும்பங்களில் சுயமரியாதைத் திருமணங்களையே நடத்துகின்றனர். இன்றுவரை 20 சுயமரியாதைத் திருமணங்கள் அங்கு நடைபெற்றுள்ளன.

குறிப்பாக, அந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட சமூகப் பெண்ணுக்கும், பிற்படுத்தப்பட்ட ஆணுக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் ஊர்வலமாக மணமக்களை அழைத்து வந்து திருமணத்தை நடத்தினர். அந்த திருமணத்தில், இரு சமுதாயத்தைச் சேர்ந்த உறவினர்களும் கலந்துகொண்டார்கள். இந்தத் திருமணங்களில் பெண்கள் யாரும் தாலி அணிவதில்லை, அவர்கள் குடும்பங்களில் பூப்பு நன்னீராட்டு விழா கிடையாது. சோதிடம், ஜாதகம், நேர்த்திக்கடன் போன்ற மூட நம்பிக்கைகள் எதையும் பின்பற்றுவதில்லை. தமிழ்ப்பெயர் மட்டுமே வைக்கிறார்கள். பெரியாரின் பிறந்தநாளும், பொங்கல் விழாவும் மட்டும்தான் அவர்களுக்கான கொண்டாட்டம். மரணத்திலும் மதச் சடங்குகள் பின்பற்றப்படுவதில்லை. இன்னும் சொல்லப்போனால், இறந்தோரை அடக்கம் செய்வதே அரிதுதான். காரணம், உடற்கொடை பதிவு செய்து, உடலை அரசு மருத்துவக் கல்லூரிக்கு வழங்கி விடுவதே அவர்களின் வழக்கம். மேலமெஞ்ஞானபுரத்தில் இருவராகத் தொடங்கிய இந்த இயக்கம், இன்று ஐம்பதுக்கும் மேற்பட்டோரை இயக்கமாக்கி யிருக்கிறது. சிலர் மருத்துவர்களாகவும், சிலர் பொறியாளர்களாகவும், பலர் பட்டதாரிகளாகவும் இருக்கிறார்கள். மெய் என்றால் உண்மை, ஞானம் என்றால் அறிவு பெயருக்கு அர்த்தம் சேர்த்திருக்கிறது மேலமெஞ்ஞானபுரம்.

# வேலுபிரபாகரனுக்கு இறுதி மரியாதை



மறைந்த வேலு பிரபாகரன் அவரின் உடலுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் அவரது இல்லத்தில் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் மாவட்டக் கழகத் தோழர்கள் மாலை அணிவித்து புகழ்வணக்கம் செலுத்தினார்கள்.

# காமராசர் பிறந்தநாள் விழா; சிலைகளுக்கு மரியாதை



**ஈரோடு** மாவட்டக் கழகம் சார்பில் கல்வி வள்ளல் காமராசரின்123 ஆம் பிறந்தநாளை முன்னிட்டு அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தலைமையில் திருமுருகன்,சுரேஷ்,பவித்ரா ஆகியோர் கல்வி வள்ளல் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



**திருப்பூர்:** மாவட்டக் கழகம் சார்பாக 15-07-2025 மாலை 4 மணி அளவில் கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமையிலும் மாநகரச் செயலாளர் மாதவன் முன்னிலையில் அனுப்பர்பாளையம் பகுதியில் உள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. கல்விக் கண் திறந்த காமராசர் அவர்களின் 123 வது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக கல்வி உரிமைப் பாதுகாப்புப் பரப்புரைப் பயணம் அனுப்பர்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகிலும், அவினாசி புதிய பேருந்து நிலையம் அருகிலும் காமராஜர் செய்த அரும்பணிகள் குறித்து மக்களிடத்தில் எடுத்துரைக்கும் விதமாக தெருமுனை கூட்டங்கள் நடைபெற்றது.

நிகழ்வில் கழக முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், மாவட்டத்தலைவர் முகில் ராசு, ஆதித்தமிழர் பேரவையின் மாநில துணைப் பொதுச் செயலாளர் விடுதலை செல்வன்,மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, சரஸ்வதி,தெற்குப் பகுதி அமைப்பாளர் ராமசாமி, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன்,மாநகர துணைத் தலைவர் மாரிமுத்து, மற்றும் கழகத் தோழர்கள் ராஜசிங்கம்,ஸ் ரீஜா, ஆத்துப்பாளையம் மதன், முத்து லட்சுமி, இனியவன், கார்த்தி, ரமேஷ், வெற்றிமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**கோவை** மாவட்டக் கழகத்தின் சார்பில் கல்வி வள்ளல் காமராசர் பிறந்த நாள் தெருமுனைக் கூட்டம் 15.07.25 அன்று சிவானந்த காலனி பேருந்து நிறுத்தம் அருகில் திவிக மாநகர செயலாளர் வெங்கட் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரத் தலைவர் நிர்மல்குமார் காமராசரின் ஆட்சியின் சாதனைகள், கல்வி திட்டங்கள் குறித்து உரையாற்றினர். விசிக செய்தி தொடர்பாளர் கோவை ராசா, இரத்தினபுரி திமுக முனீர் அகமது, தோழர்கள் சூலூர் கார்த்தி, இரத்தினபுரி பொறுப்பாளர் சதீஸ், ஸ்டாலின்ராஜா, மாதவன், ஹரிஹரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர் தமிழ்நாடு மாணவர் கழக தோழர் கதிரவன் நன்றியுரை ஆற்றினார்.



**சேலம்** மாவட்டக் கழகத்தின் சார்பில் பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளையொட்டி 15.07.2025 காலை 10.00 மணியளவில் தாரமங்கலம் உழவர் சந்தைக்கு அருகில் உள்ள காமராசர் சிலைக்கு மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.

கலந்து கொண்ட தோழர்கள்: சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணன், சேலம் மேற்கு மாவட்ட அமைப்பாளர் அன்பு, குடந்தை பாலன், பவளத்தானூர் தனசேகரன், வனவாசி நகர பொருளாளர் பன்னீர்செல்வம், வனவாசி கதிர்வேல், கே.ஆர்.தோப்பூர் கண்ணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தங்கதுரை, மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பிரபாகரன், நங்கவள்ளி நகரச் செயலாளர் சந்திரசேகரன், வனவாசி நகரச் செயலாளர் உமாசங்கர், இளம்பிள்ளை குட்டி, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் கவியரசு, தமிழருவி, பேரறிவாளன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**சென்னை:**மாவட்டக் கழகத்தின் சார்பில் கல்வி வள்ளல் காமராசர் 123வது பிறந்தநாளையொட்டி மாவட்ட கழகத்தின் சார்பில் 15.07.25 அன்று காலை 10:30 மணிக்கு, சிம்சன் அருகிலுள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து, புகழ் வணக்கம் செலுத்தினார்கள்.

கலந்து கொண்ட தோழர்கள்: தலைமை நிலைச் செயலாளர் தபசி குமரன், தலைமை குழு உறுப்பினர்அன்பு தனசேகர், மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், வடசென்னை மாவட்ட தலைவர் சேத்துப்பட்டு இராஜேந்திரன் வடசென்னை மாவட்ட அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி, இளைஞரணி அமைப்பாளர் ப.அருண், மாணவர் கழக ஒருங்கிணைப்பாளர் பேரன்பு மற்றும் மாவட்டக் கழகத் தோழர்கள் கலந்துக் கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : July 25, 2025

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran